சந்தேக நிவாரணி
ப்ரச்னோத்தர வாஹினி

மூலம்
பகவான் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ சத்திய சாய் பாபா

தமிழாக்கம்
என்.கஸ்தூரி, எம்.ஏ.பி.எல்

13. ஆத்ம ராமன்

பக்தன்: சுவாமி, சென்ற முறை தாங்கள் மஹாபாரதப் போரைப் பற்றி விளக்கினீர்கள். அவ்வாறு இராமாயணமும் ஒவ்வொருவர் உள்ளத்திலும் நிகழ்கின்றதா ?

சுவாமி : ஐயமேயில்லை. அது ஒழுங்காக நடை பெறுகின்றது.

பக்தன்: அவ்வாறாயின், இராமபிரான் எவ்வுருவில் வாழ்கிறார், சுவாமி ?

சுவாமி: ஆத்மனாய் இருப்பவர்தான் இராமபிரான். உடலென்னும் ஆடையணிந்து, ஜீவன் என்னும் நடிகபாத்திரம் ஏற்றுள்ளார்.

பக்தன்: எண்ணிய கருமத்தை எண்ணிய கணமே எய்தும் ஆற்றல் யாவையும் ஒருங்கே பெற்றவராயிருக்க, ஒரு மானிடன் போல் அவர் துன்புற்று அலைந்ததேன், சுவாமி ?

சுவாமி : அவையாவும் திருவிளையாடல், அவருக்கென உளதாய இன்பம் யாது ? துன்பம் யாது ? இவ்விரண்டும் அற்ற ஆனந்த சொரூபரன்றோ அவர் ! அவரது இச்சையின் காரணமாக மாயை தோன்றியது ; ஆக்கலும், அழித்தலும் அவரது ஆற்றலிலே அடங்கி வாழ்ந்தது. எனவே, முடியாததொன்றும் அவருக்-குள்ளதோ ? இவ்வுலகமாகிய நாடக அரங்கில், இராமாயணம் என்னும் நாடகத்தை அரங்கேற்ற விரும்பினார். அதற்கென இராமனென்னும் நாடகத் தலைவனாகத் தாமே பாத்திரமேற்று, உப நடிகர்களாகத் தம் செயலை கொண்டார். அத்தகைய சீரிய இராமாயணம் இன்றும் ஒவ்வொருவர் அகத்தேயும் நிகழ்ந்த வண்ணமாய் இருக்கிறது. உள்ளத்தில் வாழும் இராமராகிய

ஆத்மராமன் சாட்சியாய் நின்று ஒவ்வொன்றையும் கண்காணித்து வருகிறார்.

பக்தன்: ஆனால், அந்த இயக்கமில்லா "ஜடமும்," "ஜீவியும்" இதனில் பங்கேற்றது எவ்வாறு ?

சுவாமி : சுபிரஹ்வ ஞானமாகிய செயலாற்றும் சைதன் யத்தை, அந்த "ஜடம்" ஏற்றுக்கொண்டது. சைதன்யம் சீதா பிராட்டி என்னும் உருவில் பிறந்தது. ஜடமும், சைதன்யமும் ஒன்றாகுங்கால் சீதாராமன் என்று பெயர் பெறுகிறது. இவ்விரண்டும் ஒன்றுபட்டு வாழும்வரை எத்தகைய இன்னல்களும் வாரா. அத்துன்பங்களெல்லாம் நிகழ்வது, அவ்விரண்டும் வெவ்வேறாய்ப் பிரிந்தகாலைதான்.

பக்தன்: அது எங்ஙனம் சுவாமி ?

சுவாமி: பிரஹ்ம ஞானமாகிய சீதாபிராட்டியார் ஜீவனாகிய ஆத்மனைப் பிரிந்த பொழுது, கானகமாகிய இருள் வந்தடைகிறது. அதனை யாவராலும் தடுக்க இயலாது. இதனை நமக்கு உணர்த்த வேண்டி, இராமபிரான் இவ்வாறு நடித்தார். எனவே பிரஹ்ம ஞானமாகிய சீதாபிராட்டி யாரைப் பிரிந்த பொழுது இராமபிரான் துன்புற்று வனத்தில் உழன்றார்.

பக்தன் : சுவாமி, அது ஏற்புடைத்துதான். ஆனால் அந்த இலட்சுமணன் இராமபிரானுடன் ஏன் உடன்வாழ்ந்தான் ? அவன் எம் வாழ்வில் எவ்வாறு வாழ்கிறான் ?

சுவாமி: இருளடைந்த வனமென்னும் துயர்வாழ்வில் ஒருவன் தனித்துவாழ இயலாது; தன்னருகே மனமென்னும் ஒன்றினைத் துணையாகப் பெற்றேயாக வேண்டும். எனவே "மனம்" என்னும் உருவில் இலக்குமணன் இராமபிரானுடன் நின்றான்.

பக்தன் : வாலியும், சுக்ரீவனும் இந் நாடகத்தில் வந்ததன் உட்பொருள் என்ன சுவாமி ?

சுவாமி : இருளடைந்த காட்டிலே சுற்றியலையும் ஒருவன் நிராசையுறுகிறான். அப்பொழுது அவன் பகுத்தறிவைப்

பெற வேண்டியதாகிறது. ஆனால் அவை இரண்டும் ஒன்றையொன்று பகைத்து வாழ்பவை. ஒன்று வாழுமிடத்தில் மற்றொன்று வாழ இயலாது. எனவே, பகுத்தறிவு வாழ வேண்டுமாயின், நிராசை அழிபட வேண்டும். இதனைத் தெளிவாக்கத் தோன்றியவர்களே நிராசையாகிய வாலியும் பகுத்தறிவாகிய சுக்ரீவனும்.

பக்தன்: இவ்விருவருக்கும் இடையே அனுமன் தோன்றுகிறாரே, அவர் யார் சுவாமி?

சுவாமி: நிராசையை அழிக்கப் பேருதவிபுரியும் அஞ்சாமைதான் அவ்வனுமன். அவர் வீரத்தின் வடிவிலே வாழ்கிறார். காரணம் யாதோயெனின் மாயையாகிய கடலைக் கடக்க ஒருவனுக்கு மிக மிக இன்றியமையாதது அஞ்சாமை. அதனைக் காண்பிக்கும் பொருட்டே இராமபிரான் சேதுபந்தனத்தை அனுமனது உதவியைக்கொண்டு அமைத்தார்.

பக்தன்: மாயையாம் கடலைக் கடந்த பிறகு செய்ய வேண்டுவது யாது, சுவாமி?

சுவாமி : அறியாயா! கடலைக் கடந்த பிறகு இராமபிரான் யாது செய்தார்? இராவணனையும், கும்பகர்ணனையும் அழித்தார். விபீஷணனுக்கு முடி சூட்டினார். மாயை முற்றிலும் அழிந்ததென்றால், ரஜோகுணமும் தமோ குணமும் அழிந்து சத்வகுணம் நிலைக்கவேண்டும். இதனை யுணர்த்தவே இராவணன் ரஜோகுண வடிவினனாகவும், கும்பகர்ணன் தமோகுண வடிவினனாகவும், விபீஷணன் சத்வகுண வடிவினனாகவும் உருவாக்கப்பட்டனர்.

பக்தன் : இதனால் அடைந்த பயன் யாது, சுவாமி?

சுவாமி: அதனால் அடைந்த பயன் யாதென்றா கேட்கிறாய்? அதனையடுத்து அடையப் பெற்றது சீதையாகிய அநுபவஞானம்! அநுபவத்தினால் பெற வேண்டிய ஞானம்!! மெய்வாழ்வில் உணரவேண்டிய ஞானம்!! ஜடமும் சைதன்யமும் மறுமுறை ஒன்றாக இணையுங்காலை, ஜீவன் அடைய வேண்டிய ஜீவன்

முக்தியாகிய பட்டாபிஷேகம். எனவே இராமாயணத்தின் ஆழ்ந்த கருத்தாவது : ஜீவன், மனம், ஞானம், நிராசை, பகுத்தறிவு, அஞ்சாமை, மாயை, ரஜோகுணம், தமோகுணம், சத்வகுணம் ஆகிய இவையாவும் ஒவ்வோர் உருவில் அமைந்து அதனதன் செயலை ஆற்றின. இதனால் நாம் அறிய வேண்டுவது அடக்க வேண்டுவனவற்றை எவ்வாறு அடக்க வேண்டுமென்றும் அடைய வேண்டுவனவற்றை எவ்வாறு அடையவேண்டும் என்பதாம். இதனை விளக்கும் பொருட்டே ஆத்மா, இராமபிரான் உருவில் தோன்றியது, நடித்தது, காட்டியது, காட்டுவித்தது. எனவே, இராமாயணம் அன்றோடு முடிவுறவில்லை. கூறப்பட்ட பல கட்டங்களைக் கடந்து, முடிவில் அநுபவ ஞானம் பெற்று, சத்வகுணம் முடிசூட்டப்படும்வரை இந்த இராமாயணப் போராட்டம் ஒவ்வொருவர் அகத்தேயும் எப்பொழுதும் நடந்தவண்ணமே இருக்கும். ஆதலினால் என் அன்பு மகனே, இராமாயணம் ஒரு பக்கம், மற்றொரு பக்கம் மஹாபாரதம், இன்னுமொரு பக்கம் பாகவதம் ஒவ்வொருவர் உளத்தேயும் நிகழ்ந்தவண்ணமாய் இருக்கின்றது. அவைகள் எத்தகைய சூட்சும உருவில் வாழ்கின்றன என்று கூறினேனே, விளங்குகிறதா ?

பக்தன் : ஓ ! விளங்குகிறது, சுவாமி ! வாழ்க்கையாகிய இராமாயணத்தில், ஆத்மா இராமபிரானாகவும், மனம் இலட்சு மணனாகவும் வாழ்கிறது. சீதாபிராட்டியாராகிய பிரஹ்ம ஞானத்தை இராமபிரானாகிய ஆத்மா இழந்தபொழுது காடாகிய இருளடைந்த வாழ்வு ஏற்படுகிறது. ஆங்கே வாலியாகிய நிராசையும், பகுத்தறிவாகிய சுக்ரீவனும் வாழ்கின்றனர். அப்பொழுது அநுமனாகிய அஞ்சாமையைப் பற்றிக்கொண்டு, ஜாம்பவான், அங்கதன், வானர வீரர்களாகிய உவப்பு, சக்தி, உறுதி ஆகிய சேனையை உதவியாகக் கொண்டு கடலாகிய மாயையைக் கடக்க வேண்டும். அவ்வாறு கடந்து, இராவண னாகிய ரஜோகுணத்தையும், கும்பகர்ணனாகிய தாமச குணத்தையும் அழித்து, விபீஷணனாகிய சத்வகுணத்தை முடிசூட்டிக்கொள்ள வேண்டும். பிறகு சீதாபிராட்டியாகிய அநுபவஞானம் வந்தடையும். முடிவில்

நிலைப்பது சீதாராமனாகிய ஜடமும், சைதன்யமும் கலந்த பேரானந்தம் ! ஜீவன் முக்தி !! ஆன்ம விடுதலை !! ஆஹா !! என்னே இனிமையான இராமாயணம் !!! எவ்வளவு இனிமையாக சூட்சும உருவில் குணங்களிலும், புலன்களிலும் அது வாழ்கின்றது என்பதை விளக்கியருளினீர்கள்.

சுவாமி : அது வாழ்கிறது என்று நான் கூறியதாகக் கூறு கிறாயே யொழிய, வாழ்கின்றது என்ற உறுதியை நீ கண்டது போல் காணப்படவில்லையே ! இதனை உண்மையென்று உன் உள்ளம் உறுதியாகப் பற்றிக்கொள்ள வேண்டும்.

பக்தன் : நல்லது சுவாமி ! தாங்கள் இராமாயணத்தில் ஒவ்வொரு குணமும், இந்திரியமும் ஒவ்வொரு தனி உருவைப் பெற்றிருக்கின்றன என்று கூறினீர்கள், அல்லவா ? பொறிகளும் அத்தகைய உருவங்களைப் பெற்றிருக்கின்றன என்று எண்ணுங் காலை விந்தையிலும் விந்தையாக இருக்கின்றது. அதன் அமைப்பைச் சிறிது விளக்குங்கள், சுவாமி

சுவாமி : எத்தகைய குணமாக இருப்பினும், பொறிகளின் துணையின்றி இயம்ப இயலுமா ? பொறிகளினின்று தான் குணங்கள் விளைகின்றன. பொறிகளின் இயக்கமும் ஐந்து, அறிவும் ஐந்து. இப்பத்தும் மனத்தின் துணை கொண்டு ஆத்மாவில் இச்சையை உண்டுபண்ணுகின்றன அல்லவா? அதுவன்றி இணைப்புக்கு வழியேது ? அதனாலன்றோ கூறுகின்றனர் : மாயையிலே பிறந்திடுக ! மாயையிலே வளர்ந்திடுக! மாயையை அறிதற்கன்றோ மானிடத் தோற்றம்!" என்று. அவ்வாறே, புலன்களே பிறப்பிடம் ! வளர்ப்பிடம் !! ஜடசைதன்யம் ஆய்ந்தறிய வேண்டுமிடம்!! ஆரம்ப நிலையை அறிந்தனையா ? நீ அதனை அறிதற் பொருட்டன்றோ ஜீவியாகிய இராமபிரான் தோன்றினார் ! அவர் எவருடைய மைந்தன் ? தசரதனின் மைந்தனன்றோ ? இதனை அறிவித்தற் பொருட்டன்றோ பத்து இந்திரியங்களின் (கர்மேந்திரியங்கள் ஐந்து, ஞானேந்திரியங்கள் ஐந்து) உறைவிடம் என்று பொருள்பட தசரதன் என்ற பெயர் இடப்பெற்றான்.

பக்தன் : *அவ்வாறாயின் தசரதனில் நான்கு மைந்தர்களின் அமைப்பு யாது, சுவாமி ?*

சுவாமி : *நான்கென்ன, எத்தனைக் குணங்கள் வேண்டு மாயினும் அந்தப் பத்துக் குணங்களினின்றும் தோன்றி இயலும். ஆனால் இறைவனின் சீரிய குணங்கள் நான்கு என்பதை விளக்க வேண்டி நான்கு மைந்தர்களாகப் பிறப்பிக்கப்பட்டனர். அவர்களே இராமன், இலட்சுமணன், பரதன், சத்ருக்னன் என்று பெயரிடப் பட்டனர். அவர்களது சூட்சும உருவங்கள் சத்யம், தருமம், சாந்தி, பிரேமை. இவை இறைவனது நான்கு முகங்கள்.*

பக்தன் : *சுவாமி ! இவர்களில் சத்யம் யார் ? தருமம், சாந்தி, பிரேமையாக இருப்பவர்கள் யார் யார் ?*

சுவாமி : *இதை உன்னால் அறிந்துகொள்ள முடிய வில்லையா ? சத்யசொரூபனாய் இருப்பவர் இராமபிரான். இம்முடியாளும் பேற்றிற்கும் பெருமைக்கும் உரியார் யாரோ, அவர் அடைய வேண்டுமே யல்லால், நானோ உரியன் என்று தாய் கைகேயி தந்த அரசாட்சியை மறுத்து அறங்கூறிய நாவினன் பரதன்- தருமசொரூபியாவான். சத்யமாகிய இராமபிரானிடம் முழுநம்பிக்கை கொண்டு அவரல்லால் (சத்யமன்றில்) இன்பமே யில்லை யென்று, நிழல்போன்று அவரைப் பின்தொடர்ந்த அன்பன் இலட்சுமணன் அன்றோ ! அவன்தான் பிரேம சொரூபன். தனக்கென்றோர் ஆசையின்றி அம் மூவருக்கும் நிகழ்ந்தவைகளை யெல்லாம் அமைதியாகக் கண்டுகொண் டிருந்த சத்ருக்னன் சாந்தசொரூபியாவான்.*

பக்தன் : *விளக்கமுற்றேன் சுவாமி. இனி, அவர்கள் தாய் மார்களாக மூவர் கூறப்படுகின்றனரே, அவர்கள் யாவர், சுவாமி ?*

சுவாமி : *இப்பொழுது விளக்கிக் கூறினேன் அல்லவா? "மாயையில் தோன்றி, மாயையில் வளர்ந்த மாயையை வெல்க" என்று. அவ்வாறே, ஒரு குணத்தினின்றும் பிறக்க வேண்டும், வளர வேண்டும், முடிவில் அதனை வெல்ல வேண்டும். இதனைக் காண்பிக்கும் பொருட்டுத்தான் இம்மூன்று*

தாய்மார்களும் அம் மூன்று குணங்களையும் ஏற்று நின்றனர். இவர்களிலே கௌசல்யா தேவியார் சத்வ குணமாகவும், கைகேயி ரஜோகுணமாகவும், சுமித்திரை தமோகுணமாகவும் விளக்கப்பட்டனர். தசேந்திரியங் களான தசரதன் இம் மூன்று குணங்களாகிய தேவிமார்களுடன் வாழ்ந்தமையினால், அவன் "இந்திரியகுண சுவரூபன்" ஆனான். இதன் உட்பொருள் யாதோயெனின், ஒருவன் பொறிகள், குணங்கள் ஆகிய இவ்விரண்டின் துணைகொண்டே உண்மையை எளிதில் உணரமுடியாது. அதன்பொருட்டே இறைவன் பல உருவங்களின் துணைகொண்டே இராமாயணத்தைப் படைத்தார் என்பதாகும். அன்று இறைவன் ஸ்தூல இராமாயணத்தை நிகழ்த்தினார். இன்று ஒவ்வொரு உள்ளத்திலேயும் சூட்சும இராமாயணத்தை நிகழ்த்துகிறார்.

பக்தன் : சுவாமி ! உண்மையிலேயே இம் மஹாபாரத, இராமாயணத்தின் உட்பொருள் பேரின்பம் அளிக்கிறது. ஒன்றினை ஆழ்ந்து அறிந்துவிட்டால், வேறு என்ன அங்கு இருக்கப் போகிறது. செயலினாலும், மனம், புத்தி, சித்தி இவைகளின் இயக்கத்தினாலும் இராமாயணமும், மஹாபாரதமும் ஒவ்வொரு வனுடைய உள்ளத்திலும் நிகழ்ந்த வண்ணமாய் இருக்கின்றது. பாகவதமும் இவ்வாறு நடைபெறுகின்றது என்று கூறினீர்கள் அல்லவா ? அதனையும் கருணை கூர்ந்து விளக்கி அருளினால் பெருமளவு பேறுபெற்றவன் ஆவேன்.

சுவாமி : இன்று சென்று, வா. அடுத்த முறை கூறுகின்றேன்.

பக்தன் : என் பகவானே ! சென்று வருகின்றேன்.